## பகுதி A - அமைப்புக் கட்டுரை

**எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக.**

இப்பகுதி
எதனைய
எழுதுதல்
ஆகாது.

1. (a) முறைவழியாக்கிப் (processor) பயன்பாட்டை (utilization) உகப்பாக்குவதற்குப் (optimize) பணிசெயல் முறைமைகளில் பயன்படுத்தப்படும் **இரு** நுட்பங்களைத் தருக.

(b) ஒரு கணினி வலையமைப்புடன் தொடுக்கப்பட்ட ஒரு விருந்தோம்புநருக்கான (host) வலையமைப்புத் தொடர்புகையைச் (connectivity) சரிபார்ப்பதற்கு "ping" கட்டளையை நிறைவேற்றுவதன் மூலம் பெறப்பட்ட பேற்றின் ஒரு பகுதி கீழே காணப்படுகின்றது.

```
PING www.cam.ac.uk (131.111.8.46) 56(84) bytes of data.
64 bytes from ipv4.www.cam.ac.uk (131.111.8.46) : icmp_seq=1 tt1=242 time=201 ms
64 bytes from ipv4.www.cam.ac.uk (131.111.8.46) : icmp_seq=2 tt1=242 time=204 ms
64 bytes from ipv4.www.cam.ac.uk (131.111.8.46) : icmp_seq=3 tt1=242 time=196 ms
64 bytes from ipv4.www.cam.ac.uk (131.111.8.46) : icmp_seq=4 tt1=242 time=203 ms
64 bytes from ipv4.www.cam.ac.uk (131.111.8.46) : icmp_seq=5 tt1=242 time=195 ms
--- www.cam.ac.uk ping statistics ---
5 packets transmitted, 5 received,
```

மேற்குறித்த தகவலைப் பயன்படுத்திக் கீழே தரப்பட்டுள்ள (i), (ii), (iii), (iv) ஆகிய பகுதிகளுக்கு விடை எழுதுக.

(i) மேற்குறித்த பேற்றில் **time** என்பதன் கருத்து யாது ?

(ii) வலைகடப்பிடம் **www.cam.ac.uk** இற்கு விரும்தோம்புநராக அமையும் சேவையகத்தின் (server) IP முகவரி யாது ?

(iii) மேலே (ii) இல் பெற்ற IP முகவரியின் வகுப்பை இனங்காண்க.

(iv) பொட்டல இழப்பின் (packet loss) சதவீதம் யாது ?

(c) ஒரு பணிசெயல் முறைமையில் ஒரு செயன்முறை (process) ***created/new, waiting, running, terminated, blocked, swapped out and waiting,*** or ***swapped out and blocked*** ஆகிய நிலைகளில் ஒரு நிலையாக இருக்கலாம்.

மேற்குறித்த நிலைகளில் எதிலிருந்து ஒரு செயன்முறை ***blocked*** நிலைக்கு நேரடியாக அசைக்கப்படலாம் ?

The National e-learning Portal for The General Education

[பக். 3 ஐப் ப

(d) செல்லிடத் தொலைபேசியின் பின்வரும் தேவைகள் தொழில்சார்ந்தனவா (functional), தொழில்சாராதனவா (non functional) எனக் குறிப்பிடுக. உமது விடைகளை நியாயப்படுத்துக.

(i) பயனர் ஒருவர் செல்லிடத் தொலைபேசியைப் பயன்படுத்தி ஓர் அழைப்பைச் செய்யத்தக்கதாக இருக்கும்.

(ii) அது கதிர்ப்புகளைக் காலுவதன் மூலம் பயனருக்குத் தீங்கு பயக்காததாக இருக்கும்.

இப்பகுதி எதனையும் எழுதுதல் ஆகாது.

The National e-learning Portal for The General Education

[பக். 5 ஐப் பா

இப்பகு
எதனை
எழுதுத
ஆகாது

(iii) மேலே (ii) இல் நீர் பெற்றுள்ள பாய்ச்சற் கோட்டுப்படத்தை ஒரு போலிக் குறிமுறையாக (pseudo code) மாற்றுக.

(b) 8-பிற்றில் (8-bit) இரண்டின் நிரப்பு (two's complement) எண்கணிதத்தில் கணிப்பு (computation) 15+(–5) எங்ஙனம் செய்யப்படுகின்றதெனக் காட்டுக.

மிகவும் பொருளுடைய பிற்றில் (most significant bit) பிறப்பிக்கப்படும் எடுத்துச் செல்லலுடன் (carry) எங்ஙனம் தொடர்புபடுவீரென விளக்குக.

The National e-learning Portal for The General Education

இப்பகுதியில் எதனையும் எழுதுதல் ஆகாது.

4. (a) தனித்துவம் (privacy), மென்பொருள் களவு (software piracy) என்னும் பதங்களின் கருத்து யாது ?

(b) செல்லிடக் கணிப்பு (mobile computing) என்னும் பதத்தை விவரிக்க.

(c) பின்வரும் தோற்றப்பாட்டைக் கருதுக:

குறைகடத்தி (semi conductor) உற்பத்திக் கம்பனி ஒன்றின் கிளைகள் யப்பானிலும் ஐக்கிய அமெரிக்க அரசுகளிலும் உள்ளன. தற்போது அபிவிருத்திக் குழுவின் பிரதிநிதிகள் தமது தொழினுட்ப விவாத விடயங்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்குக் கம்பனியின் ஏனைய கிளைகளுக்கு அடிக்கடி சென்று வர வேண்டும். கடந்த பல ஆண்டுகளாகக் கம்பனி இப்பொறினுட்பம் செலவுமிக்கதும் நேரத்தை எடுப்பதுமாகும் என்பதை உணர்ந்துள்ளது.

(i) ஏனைய கிளைகளுக்குச் சென்று வராமல் இத்தொழினுட்ப மீட்டாய்வுக் கூட்டங்களை நடத்துவதற்கான (ICT) அடிப்படை முறையை ஓர் ICT மாணவன் என்ற ரீதியில் தெரிவிக்க.

(ii) மேலே (i) இல் தெரிவித்த முறைக்குத் தேவையான **மூன்று** அத்தியாவசிய ICT சாதனங்களைக் (devices) குறிப்பிடுக.

* *


[பக். 8 ஐப் பார்க்க

2. (a) ஓர் HTML ஆவணத்தில் ஒரு பந்தி அடையாள ஒட்டுக்கும் (paragraph tag) ஒரு முறிப்பு ஒட்டுக்கும் (break tag) ஒரு மேலோடி (browser) காட்டும் துலங்கல்கள் யாவை ?

(b) பின்வரும் HTML குறிமுறைக் கூறு காட்டப்படும்போது (render) காட்சிப்படுத்தப்படுவது யாது ? அக்காட்சியில் வெற்றுக் கோடுகள் (blank line) இருப்பின் அவற்றைக் குற்றிட்ட கோடுகளின் (................................) மூலம் தெளிவாகக் காட்டுக.

```
<p>Our evergreen school days<br/>
will not come back again</p>
<p>From the nursery to high school
we learnt the best</p>
```

(c) "Agri Sri Lanka" என்னும் கம்பனிக்குக் கீழே தரப்பட்டுள்ளவாறு ஒரு வலைப்பக்கம் தேவைப்படுகின்றது.




மேற்குறித்த வலைப்பக்கத்தை ஆக்குவதற்கு ஓர் HTML குறிமுறையை எழுதுக. விம்பக் கோப்பின் (image file) பெயர் "agriSL.jpg" எனக் கொள்க. **Jay Agro Technologies, Lanka Agri Systems Pvt Ltd.** என்னும் இணைப்புகள் முறையே "http://www.jayagrotec.com", "http://www.lkagrisys.com" என்னும் கடப்பிடங்களுடன் இணைய வேண்டும்.

[பக். 10 ஐப் பார்க்க

3\. (a) ஒரு கணினியில் தொழிற்படும் விண்ணப்பம் (an application) நிறைவேற்றப்படும்போது 0100110100010111 என்னும் மெய்நிகர் (virtual) நினைவக முகவரியுடன் தொடர்புபடுகின்றது.

(i) மேற்குறித்த கணினியில் அடையத்தக்க உயர்ந்தபட்ச மெய்நிகர் முகவரி நினைவக வெளியைக் கிலோபைற்றில் கணிக்க.

(ii) மேலே (i) இல் இனங்கண்ட நினைவக முகவரி வெளியின் வீச்சு (தொடக்க, இறுதி முகவரிகள்) யாது ?

(iii) ஒரு பக்க அளவு (size) 4 கிலோபிற்று எனின், பக்க எண்ணை வகைகுறிப்பதற்கு எத்தனை பிற்றுகள் போதியனவாகும் ? உமது கணிப்பைக் (computation) காட்டுக.

(b) A, B என்பன இரு வலையமைப்புப் பகுதிகளுடன் தொடுக்கப்பட்ட கணினிகள் எனக் கொள்க. கட்டளை 'ipconfig' இக்கணினிகளில் நிறைவேற்றப்படும்போது பின்வரும் தகவல் பெறப்படுகின்றது :

1\. கணினி A யில்

IPv4 முகவரி .................................................. : 192.168.1.2

உபவலை மறைமுகம் (Subnet mask) ...... ... : 255.255.255.0

கொடா நுழைவாயில் (Default gateway)...... : 192.168.1.254

2\. கணினி B யில்

IPv4 முகவரி .................................................. : 192.168.2.3

உபவலை மறைமுகம் ....................................... : 255.255.255.0

கொடா நுழைவாயில்...................................... : 192.168.2.254

A, B ஆகிய இரண்டும் ஒன்றோடொன்று தொடர்பாடத்தக்கதாக மேற்குறித்த இரு வலையமைப்புப் பகுதிகளுக்கும் ஒரு வலையமைப்பு வரிப்படத்தை வரைக. வரிப்படத்தில் ஒவ்வொரு சாதனத்தினதும் (device) IP முகவரிகளைத் தெளிவாகக் காட்டுதல் வேண்டும்.

(c) பின்வரும் முறைமைகள் ஒவ்வொன்றினதும் பிரதான தொழிலை வலையமைப்புப் பாதுகாப்பு சார்பாகச் சுருக்கமாக விளக்குக.


(i) தீச்சுவர் (firewall)

(ii) பதிலாள் சேவையகம் (proxy server)

(iii) ஹனி பொட்ஸ் (honey pots)

The National e-learning Portal for The General Education

4\. பின்வரும் ER வரிப்படத்தைக் கருதுக.




(a) மாணவன் ஒருவன் ஒரு பாடத்திற்குப் பெற்ற புள்ளிகளை வகைகுறிப்பதற்கு ஒரு பண்பைச் (attribute) சேர்ப்பதற்கு மேற்குறித்த ER வரிப்படத்தில் மிகப் பொருத்தமான உள்பொருளை (entity) அல்லது தொடர்புடைமையைக் (relationship) குறிப்பிடுக.

(b) மேற்குறித்த ER வரிப்படத்தில் எல்லாத் தொடர்புடைமைகளையும் ஒன்றுக்கொன்றான, ஒன்றுக்குப் பலவான, அல்லது பலவுக்குப் பலவான எனப் பாகுபடுத்துக. உமது விடையை நியாயப்படுத்துக.

(c) மேற்குறித்த ER வரிப்படம் ஒரு தொடர்புநிலைத் (relational) தரவுத்தளமாக மாற்றப்படும்போது அட்டவணைகளின் கட்டமைப்பை அவற்றின் பண்புகளை உள்ளடக்கி எழுதுக.

(d) மேலே (c) இல் தெரிவித்த அட்டவணை எதற்கும் முதல் சாவியை (primary key) எழுதுக.

(e) மேலே (c) இல் தெரிவித்த அட்டவணையைப் பயன்படுத்தி Subject ID இன் பெறுமானம் AL001 ஆகவுள்ள பாடத்திற்கு Student ID இன் பெறுமானம் ST001 ஆகவுள்ள மாணவனுக்குக் கிடைத்த புள்ளிகளைப் பெறுவதற்கு ஓர் SQL கூற்றை எழுதுக.

[பக். 11 ஐப் பார்க்க

